Newsletter

ALPHA MIND POWER™

"Power of the Subconscious Mind"



# MARCH 2014

My Dear Alpha Siddha,

Love and blessings to you.

I am sure you are enjoying many benefits with Alpha meditation. However, sometimes you may feel that when many goals are manifesting easily why is some goal getting stuck somewhere? What could be the reason? The technique is the same for all goals. So, why is a particular goal not manifesting? Have you felt this at some time?

We have been discussing many factors which can stop us from manifesting our goals. In this issue we will discuss fear of manifestation. Are you surprised? How can there be fear of manifestation when you wish to manifest a goal? Look at the following example.

Srilekha, Alpha Siddha, has completed upto level 3. She has manifested many goals with Alpha and is enjoying great inner transformation too. However, one goal remained pending. She wanted to get promoted in her organization. She has been meditating for this goal for the past six months but it did not happen. She had already passed the exam. But somehow she was not selected in the last interview.

In her own words 'I was expecting to get promoted. But then, if I get promoted, I will be transferred to Mumbai where our Head Office is located. I have a 18 months old child. As it is, I feel guilty to leave the child with my servant maid and go to work. After the promotion, I really do not know what I will do. My husband is into business. So, he cannot relocate to Mumbai. I don't know how I will manage once I am promoted. But still I really want to get promoted'.

Now it was very clear that although the goal was clear in her mind, she was very much afraid that it will manifest. Her life will have to undergo a lot of changes with the promotion and she was already afraid that she will not be able to manage it. That fear was not allowing her to manifest the goal. Once I pointed this out to her, she became silent and pondered for a while. Then she blurted out 'Yes Guruji, I don't really think I want to get promoted now. Let my child grow up a bit. Perhaps it is good that it did not happen now'. There was great relief on her face.

This is how fear of manifestation itself can stop the manifestation. In such cases, it would be best to sit in meditation and think about the goal, how it would manifest and how you would feel when it really happened. That will help you to understand whether you are really ready to manifest that goal. After all, a goal that makes your life more difficult can be postponed or modified to suit your present life and make you happier.

In the next issue we will see how too many choices can confuse the mind about the goal and make it difficult to manifest. We will also see how to select the right goal.

Wishing you fulfilling meditations and great manifestations!

Blessings,
Dr. Viji Panthaiyan

அன்புள்ள ஆல்ஃபா சித்தரே,

அன்புடன் ஆசீர்வாதங்களுடன் எழுதுகிறேன்.

ஆல்ஃபா தியானத்தின் மூலம் சிறந்த பயன்களை அடைந்து வருகிறீர்கள் என்று நிச்சயம் நம்புகிறேன். இருப்பினும் பல இலட்சியங்கள் நிறைவேறும் அதே நேரம் எங்கோ ஒரு இலட்சியம் நிறைவேறாமல் அப்படியே நிற்பதையும் உணர்ந்திருப்பீர்கள். காரணம் என்ன? எல்லா இலட்சியங்களுக்கும் செய்முறை ஒன்று தான். அப்படி இருந்தும் ஒரு இலட்சியம் மட்டும் ஏன் நிறைவேறவில்லை? எப்பொழுதாவது இப்படி தோன்றியிருக்கிறதா?

நமது இலட்சியங்களை நிறைவேற விடாமல் செய்யும் பல விஷயங்களைப் பற்றி பேசி வருகிறோம். இந்த இதழில் இலட்சியத்தைப் பற்றிய பயத்தை பற்றி பேசுவோம். ஆச்சரியமாக இருக்கிறதா? இலட்சியம் என்பது நமது மனம் விரும்பும் ஒன்று எனும் பொழுது அதில் பயம் எப்படி வரும்? கீழ் கண்ட உதாரணத்தை பார்ப்போம்.

ஆல்ஃபா சித்தர் ஸ்ரீலேகா மூன்றாம் கட்டம் வரை முடித்திருக்கிறார். ஆல்ஃபா மூலம் பல இலட்சியங்கள் நிறைவேற கண்டவர். அத்துடன் தனக்குள் பல மாற்றங்களையும் கண்டு வருபவர். ஆனால் ஒரு இலட்சியம் மட்டும் நிறைவேறாமலேயே இருந்தது. தான் வேலை செய்து வந்த நிறுவனத்தில் வேலை உயர்வு வேண்டும் என விரும்பினார். கடந்த ஆறு மாதங்களாக இதற்காக தியானமும் செய்து வந்தார். ஆனால் அதற்கு பலனில்லை. அதற்கான பரீட்சையிலும் தேறி விட்டார். ஆனால் கடைசி கட்டத்தில் தேர்ச்சி பெறவில்லை.

அவரது வார்த்தைகளில் ‘நிச்சயம் தேறி விடுவேன் என்று நம்பினேன். ஆனால் பிரமோஷன் கிடைத்தாலும் கஷ்டம் தான். உடனே மும்பையிலுள்ள எங்கள் தலைமை அலுவலகத்திற்கு மாற்றி விடுவார்கள். எனக்கு ஒன்றரை வயது குழந்தை இருக்கிறது. இப்பொழுது கூட அவனை வேலைக்காரியிடம் விட்டு வட்டு நான் அலுவலகத்துக்கு செல்லும் பொழுது குற்ற உணர்வுடன் தான் செல்கிறேன். பிரமோஷன் கிடைத்த பிறகு என்ன செய்ய போகிறேன் என்றே தெரியவில்லை. என் கணவர் சொந்த தொழில் செய்கிறார். அதனால் அவரால் மும்பை வர முடியாது. ஆனால், எப்படியாவது எனக்கு பிரமோஷன் வேண்டும்.’

இப்பொழுது ஒன்று தெளிவாக புரிந்தது. இலட்சியம் மனதில் தெளிவாக இருந்தாலும், அது நிறைவறி விடுமோ என்ற பயமும் மனதில் நிறைந்து இருந்தது. பிரமோஷன் கிடைத்து விட்டால் அவரது வாழ்வே மாறி விடும். அதை எப்படி சமாளிப்பது என்ற பயம் அவர் மனம் முழுதும் வியாபித்து இருந்தது. அந்த பயமே இலட்சியத்தை நிறைவேற விடாமல் செய்து கொண்டிருந்தது. நான் இதை சுட்டி காட்டியதும் சற்று நேரம் அமைதியாக இருந்தார். பின் சட்டென்று சொன்னார் ‘ஆமாம் குருஜி. உண்மையில் எனக்கு இந்த பிரமோஷன் இப்பொழுது தேவையில்லை.என் குழந்தை கொஞ்சம் வளரட்டும். இப்பொழுது இது வராமல் இருந்ததே நல்லது என்று நினைக்கிறேன்’. அவரது முகத்தில் நிம்மதி தெரிந்தது.

இப்படித்தான் இலட்சியம் நடந்து விடுமோ என்ற பயமே ஒரு இலட்சியத்தை நடக்க விடாமல் செய்து விட முடியும். இத்தகைய தருணங்களில் தியானத்தில் அமர்ந்து இலட்சியத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். அது நடை பெறும் பொழுது எப்படி இருக்கும் என்றும் சிந்திக்க வேண்டும். அப்படி செய்யும் பொழுதே அந்த இலட்சியம் நிறைவேற நாம் எந்த அளவுக்கு தயாராக இருக்கிறோம் என்று புரியும். பார்க்கப் போனால் இன்றைய வாழ்க்கையை திசை மாறி செல்ல செய்யும் இலட்சியத்தை சற்று மாற்றி அமைத்து நிம்மதியையும் சந்தோஷத்தையும் உணரலாமே?

அடுத்த இதழில் பல வாய்ப்புகள் இருக்கும் பொழுது மனம் எப்படி குழப்பமடையும் என்று பார்ப்போம். இதுவும் அந்த இலட்சியத்தை நிறைவேற விடாது. சரியான இலட்சியத்தை எப்படி தேர்ந்தெடுப்பது என்றும் பார்ப்போம்.

சிறப்பான தியானங்களை அனுபவிக்க, இலட்சியங்கள் நிறைவேற எனது ஆசீர்வாதங்கள்.

Dr. விஜி பந்தையன்.

# ALPHA FEEDBACK - ஆல்ஃபா அனுபவங்கள்

I had to go to Kuwait to renew my residence permit. I was shocked to hear that my name was misspelt in Arabic and that my finger prints had to be done again. They said they won't clear my papers till this was done. After having lived there for 25 years, this was very disturbing. My husband tried to pull all strings. But nothing worked. Finally, I did Alpha Meditation, sent energy balls as taught in our workshop. To all our surprise everything went very smoothly. The papers from the Embassy came very quickly. The immigration officers were very helpful and finger printing was not needed as my old finger prints were clear. All thanks to Alpha and it gives me great joy in sharing this experience with you. Alpha Siddha - Chennai

Dear Guruji, Thanks for the webcast of New Year Homam 2014. I felt priviledged to watch from Malaysia. I felt immense pleasure and peace by observing the homam and seeing you through web. Seeking your blessings. Ms. Malathy- Malaysia.

Thanks to our Guruji for arranging the grand Homam for New Year. It was a blessing to be able to see it and get the blessings. All the arrangements were excellent and the food was also great. The joy was obvious in everyone's face. Thank you once again for arranging this Homam. We are blessed!

Ms. T. Sasikala Mohanraj – Chennai

After attending level-1, I am experiencing lot of changes in my life. My husband had a conflict with my parents & sisters. He objected me from seeing them. But when I talked to his subconscious mind, by Alpha Communication within 3 days he gave me permission to meet my parents & sisters and attend my Grandfather's first ceremony. Thanks to Alpha!

Alpha Siddha - Chennai

ஆல்ஃபா தியானத்தில் முதல் கட்டம் முடித்தவுடன் என்னுடைய வாழ்க்கையில் பல நல்ல மாறுதல்கள் ஏற்பட்டன. என் கணவருக்கு என்னுடைய பெற்றோரரிடமும், சகோதரிகளிடமும் கருத்துவேறுபாடு இருந்துவந்தது. நான் ஆல்ஃபா தியானத்தின் மூலம் என் கணவரின் ஆழ்மனதுடன் தொடர்ந்து பேசிவந்தேன். அடுத்த 3 நாட்களிலேயே அவர் என் பிறந்த வீட்டிற்கு செல்ல அனுமதி தந்தார். என் தாத்தாவின் முதல் திதிக்கான சடங்குகளிலும் என்னால் கலந்து கொள்ள முடிந்தது. ஆல்ஃபாவிற்கு நன்றி! ஆல்ஃபா சித்தர் – சென்னை

நான் 25 வருடமாக குவைத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய குடியிருப்பு அனுமதியை புதுப்பிப்பதற்காக கொடுத்தபொழுது என்னுடைய பெயர் அராபிக் மொழியில் தவறாக இருப்பதாகவும் மேலும் கைரேகையும் சரியில்லை என்று கூறிவிட்டார்கள். நான் ஆல்ஃபா தியானம் தொடர்ந்து செய்துவந்தேன். சக்திப்பந்தும், நிறங்களும் தொடர்ந்து செலுத்திவந்தேன். என்ன ஆச்சரியம்! அடுத்த 2வது நாளே தூதரகத்திடமிருந்து குடியிருப்பு அனுமதி கிடைத்துவிட்டது. எப்பொழுதுமே கூட்டமாக காணப்படும் அலுவலகம் அன்று காலியாக அருந்தது. மேலும் கடுமையாக நடந்துகொள்ளும் பணியாளர்களும் அன்று மிகவும் அமைதியாக காணப்பட்டது மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. கைரேகை எடுக்கும் பெண்ணும் அதை பரிசோதித்துவிட்டு.'முன்னர் எடுத்த கைரேகையே சரியாக உள்ளது, மீண்டும் எடுக்க வேண்டிய அவசியமில்லை' என்று கூறினார். ஆல்ஃபா மைண்ட் பவர் தான் எங்களை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றியது. ஆல்ஃபாவிற்கு எனது நன்றிகள்! ஆல்ஃபா சித்தர் – சென்னை

குருஜி!, ஆல்ஃபா மைண்ட் பவர் புத்தாண்டு ஹோம நிகழ்ச்சியை வெப்காஸ்டில் ஒளிபரப்பியதற்கு மிகுவும் நன்றி. இந்த நிகழ்ச்சியை நான் மலேசியாவிலிருந்து கண்டுகளித்தேன். இந்த நிகழ்ச்சி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், அமைதியையும் தந்தது. நான் இங்கிருந்தபடியே ஹோமத்தின் தெய்வீக சக்தியை உணர முடிந்தது. தங்களை இங்கிருந்தபடியே தரிசித்ததில் மிகுந்த ஆனந்தம் அடைந்தேன்.

திருமதி மாலதி – மலேசியா

குருஜி! தாங்கள் ஏற்பாடு செய்திருந்த புத்தாண்டு ஹோமம் இந்த உலகிற்கும், இந்த நாட்டிற்கும், எல்லா வீட்டிற்கும் நல்ல சக்தியை தரும் வகையில் அமைக்கபட்டிருந்தது மிகவும் நன்றி! நிகழ்ச்சி ஆரம்பத்திலிருந்து முடியும் வரை நடந்த அனைத்து பூஜைகளும் வந்திருந்த அனைவருக்கும் நிறைவையும், பாக்கியத்தையும் தரும் வகையில் மிகவும் நல்ல முறையில் இருந்தது. மேலும் சாப்பாடு அறுசுவையும் கலந்து மிகவும் அருமையாக இருந்தது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரது முகத்திலும், அவர்கள் பேசும் பேச்சிலும் ஒரு புத்தணர்வு தெரிந்தது. இதில் கலந்துகொண்டதிலிருந்து எனக்கு ஒரு புத்துணர்சியும் உற்சாகமும் ஏற்பட்டுள்ளது. மீண்டும் குருஜிக்கு என்னுடைய நமஸ்காரங்களையும், நன்றியையும் தெரிவித்துகொள்கிறேன்.

திருமதி சசிகலா மோகன்ராஜ் – சென்னை



Dear Guruji,

My son Vikrant Rajesh stood first in the city in Spellathon 2013. He participated in the contest at 3.45 p.m after taking your blessings on Sunday. Your blessings , positive attitude & affirmation have definitely, helped him to achieve this place. Though he has been taking part in the Spelling contest for 6 years, it appeared like a miracle on that day as one should be lucky to get good set of words to spell. He was indeed lucky. Our sincere thanks to you for making this possible.

With kind regards.

***Srividhya Rajesh***

**குருஜியுடன் ரிஷிகேஷ் யாத்திரை!**

தேதி: 30.04.2014 முதல் 04.05.2014 வரை

மேலும் விவரங்களுக்கு ஆல்ஃபா மைண்ட் பவர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்

***Join us on a Yatra to Rishikesh with our Guruji!***

*Date: 30.04.2014 to 04.05.2014*

*For Further details contact Alpha Mind Power Office*



***Guruji with Alpha Siddhas at Mantra Shakthi workshop, Madurai***

<u>Watch Guruji's TV Programs</u>

- Makkal TV - Monday 9.30am
- Sankara TV - Friday 9.30am
- Watch our Guruji's TV programs on our Website www.alphamindpower.net



***Guruji with Alpha Siddhas at Agnikundam workshop, Salem***